**Press note no. 37** **dt. 21.8.09**

**21.8.2009 அன்று புதுடெல்லியில் நடைபெறும் மாநில வேளாண்மை அமைச்சர்கள் கூட்டத்தில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு வீரபாண்டி எஸ். ஆறுமுகம் அவர்கள் ஆற்றிய உரையின் சுருக்கம்**

மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய மாண்புமிகு மத்திய உணவு மற்றும் வேளாண்மை அமைச்சர் ஸ்ரீ சரத்பவார்ஜி அவர்களே, அனைத்து மாநில வேளாண்மை அமைச்சர்களே, மத்திய மாநில அரசு அலுவலர்களே, அனைவருக்கும் வணக்கம்.

**நதி நீர் இணைப்புத் திட்டம்**

இந்தியா, இயற்கை வளங்களும், வற்றாத ஜீவ நதிகளும், பல்வேறு தட்ப வெட்ப நிலைகளையும் கொண்டுள்ளதாக இருப்பதால், பருவமழை அனைத்து பகுதிகளிலும், ஒரே காலத்தில் பெய்வதில்லை அதனால் ஒரு பகுதி வெள்ளத்தாலும், மற்றொரு பகுதி வறட்சியினாலும், பாதிக்கப்படுகிறது. வட மாநிலங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு விளைநிலங்கள் பாழாவதுடன், உபரி நீர் கடலில் கலக்கிறது. இந்த உபரி நீரை வறண்ட பகுதிகளுக்கு கொண்டு செல்வதால் வெள்ள சேதத்தை தடுப்பதுடன், அதிக பரப்பிலுள்ள வறண்ட நிலங்களை பாசன விளை நிலங்களாக மாற்றலாம். நாட்டிலுள்ள சுமார் 113.8 கோடி மக்கள் தொகைக்கு, ஆண்டுக்கு 224 மில்லியன் மெட்ரிக் டன் உணவு தானியம் தேவைப்படுகிறது. இதனை ஈடுசெய்ய தேசிய அளவிலான நதிநீர் இணைப்பு மிகவும் அவசியமாகிறது.

19.12.2007 அன்று நடைபெற்ற தேசிய வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆறுகளின் இணைப்பு ஒரு “**தேசிய திட்டம்**“ என அறிவிக்க வேண்டுமென்றும், அதற்குக் காலவரை கொண்ட ஒரு செயல் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டதை நான் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

இதில் காலதாமதம் ஏற்படுவதை கருத்தில் கொண்டு, தமிழக அரசு முதற்கட்டமாக மாநிலத்திற்குள்ளேயே, மத்திய அரசின் நிதியுதவியை எதிர்நோக்கி காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டம் ரூ.165 கோடி மதிப்பீட்டிலும், தாமிரபரணி–கருமேனி ஆறு – நம்பி ஆறு இணைப்புத் திட்டம் ரூ.369 கோடி மதிப்பீட்டிலும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான செலவை மத்திய அரசு அனுமதிப்பதுடன், கங்கை–காவிரி நதிகளை இணைக்க மத்திய அரசு விரைவான நடவடிக்கைகளை

மேற்கொள்ள வேண்டுமாய் தமிழக அரசின் சார்பாக இங்கு நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

மழையளவு மற்றும் வறட்சி மாவட்டங்கள்

தமிழ்நாட்டில் அனைத்துப் பயிர் சாகுபடி செய்யப்படும் **58.15** இலட்சம் எக்டர் பரப்பில், **56** சத பரப்பு பாசன வசதி பெற்றுள்ளது. மீதமுள்ள **44** சத பரப்பில் மானாவாரிப் பயிர்கள் சாகுபடி செய்யப்படுகிறது. தென்மேற்கு பருவகாலத்தில் **12.08.2009** வரை இயல்பாக பெற வேண்டிய மழை **141.1** மில்லி மீட்டருக்கு பதிலாக **107.1** மில்லி மீட்டர் மட்டுமே பெறப்பட்டுள்ளது. மாநில அளவில் மழை **24** சதவீதம் குறைந்துள்ளது. மாவட்ட வாரியாக கணக்கில் கொண்டால் மொத்தமுள்ள **32** மாவட்டங்களில் மிகக் குறைவான மழை **26** மாவட்டங்களில் கிடைக்கப் பெற்றுள்ளது.

கரீப் சாகுபடி மற்றும் பாதிப்பு

தமிழகத்தில் கடந்த ஆண்டு கரீப் பருவத்தில் **19.28** லட்சம் எக்டரில் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. நடப்பாண்டில் **10.8.2009** வரை **7.26** லட்சம் எக்டரில் மட்டுமே பயிர் சாகுபடி செய்யப்பட்டு, **12.02** லட்சம் எக்டரில் தென் மேற்கு பருவ மழை குறைந்ததின் காரணமாக இதுவரை பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படவில்லை. இதனால் ரூ.**2,860.25** கோடி அளவிற்கு தமிழக விவசாயிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

சாகுபடி பயிரை பாதுகாக்க விவசாயிகள் நலனுக்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

**i)** கரீப் பருவத்தில், **10.8.2009** வரை சாகுபடி செய்யப்பட்டுள்ள **7.26** லட்சம் எக்டரில், காவேரி பாசன பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ள **79,800** எக்டர் குறுவை நெற்பயிரினை பாதுகாக்க மேட்டூர் அணை **28.7.2009**ல் திறக்கப்பட்டுள்ளது.

ii) காவேரி பாசனம் அல்லாத பகுதிகளில் நிலத்தடி நீரை நம்பி பயிரிடப்பட்டுள்ள **1.38** லட்சம் எக்டர் நெற்பயிர், **1.44** லட்சம் எக்டர் கரும்பு மற்றும் **41** ஆயிரம் எக்டர் வாழை மற்றும் காய்கறி பயிர்களை பாதுகாக்க பாசனத்திற்கு தேவையான அளவிற்கு மின் விநியோகம் செய்யப்படுகிறது. மத்திய அரசு ஒதுக்கீடு செய்யும் மின் அளவையில் **800** மெகாவாட் மின்சாரம் கூடுதலாக தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

iii) சம்பா (ராபி) பருவத்தில் விவசாயிகள் முழு அளவில் சாகுபடி மேற்கொள்ள தேவையான அளவிற்கு தரமான விதைகள், உரங்கள் விநியோகம் செய்ய தமிழக அரசு தயார் நிலையில் உள்ளது.

iv) நடப்பாண்டில் தேசிய வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.22,611 கோடி விவசாய பயிர் கடன் வழங்க திட்டமிடப்பட்டு, தடையின்றி வழங்கப்பட்டு வருகிறது.

v) தமிழ்நாட்டில் கூட்டுறவு பயிர்க் கடனுக்கான வட்டி 4 சதமாக குறைக்கப்பட்டு, 2009–2010ஆம் ஆண்டில் பெற்ற கடனை உரியகாலத்தில் திருப்பி செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கப்படுகிறது.

vi) தமிழகத்தில் 18 லட்சத்து 72 ஆயிரம் விவசாய பம்பு செட்டுகளுக்கு இலவச மின்சாரம் வழங்கப்படுகிறது.

vii) வேளாண் பயிர் காப்பீட்டு திட்டத்தில், கடன் பெறும் மற்றும் கடன் பெறாத விவசாயிகளுக்கான பிரிமியத் தொகையில், 50 சதவீதம் தமிழக அரசால் மானியமாக வழங்கப்படுகிறது.

viii) வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயன்படுத்தப்படும் 99,776 டீசல் பம்பு செட்டுகளுக்கு தற்போதுள்ள ஒரு லிட்டர் டீசல் விலையான ரூ.34.41ல் ரூ.15/–ஐ மத்திய அரசும் மாநில அரசும் 50:50 சத மானியத்தில் ஏற்றுள்ளது. அதிகபட்சமாக ஒரு எக்டருக்கு ரூ.1000/– வீதம் ஒரு விவசாயிக்கு 2 எக்டருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தமிழக அரசின் நிதி நிலை திருப்திகரமாக இல்லாத நிலையில் மத்திய அரசே மானியத் தொகை ரூ.15 கோடியை முழுமையாக ஏற்க தமிழக அரசின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

**கோரிக்கைகள்**

1) வறட்சியால் பயிர் சாகுபடி மேற்கொள்ளப்படாத விவசாயிகளின் நஷ்டத்தை ஈடு செய்ய, தேசிய இயற்கை பேரிடர் மீட்பு நிதியின் விதிமுறைகளின்படி, விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க ரூ.325.00 கோடியை, தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்து, தமிழக விவசாயிகளை பாதுகாக்க வேண்டுமென்று மத்திய அரசை தமிழக அரசின் சார்பாக கேட்டுக் கொள்கிறேன்.

2) வறட்சியால் பாதிக்கப்பட்ட தமிழக விவசாயிகளுக்கு, வரும் பருவத்தில் முழுமையாக சாகுபடியினை மேற்கொள்ள, நெல் விதை விநியோக மானியத்தை கிலோவிற்கு ரூ.5/லிருந்து ரூ.15/– ஆகவும், பருத்திக்கு ரூ.20/–லிருந்து ரூ.30/–ஆகவும், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய்வித்து விதைகளுக்கு ரூ.12/–

லிருந்து ரூ.22/—ஆகவும் உயர்த்தி வழங்கவும், அதற்காக ரூ.144.86 கோடி நிதியை மத்திய அரசு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

3) 2009—2010ஆம் ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், வேளாண் திட்டங்களை செயல்படுத்த ரூ.127.9 கோடி தமிழகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வறட்சியை கருத்தில் கொண்டு இத்திட்டத்திற்கு மேலும் கூடுதலாக ரூ.125 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அரசு அனுமதிக்க வேண்டுமென்று வலியுறுத்த விரும்புகிறேன்.

4) சொட்டுநீர் பாசனத் திட்டத்தினை பெருமளவில் விவசாயிகள் ஏற்க முன்வராததால் தமிழக அரசின் பங்கினை 10 சதத்திலிருந்து 25 சதமாக உயர்த்தி அறிவித்துள்ளது. இத்திட்டத்தை விவசாயிகள் விரும்பி ஏற்க, தற்போது அளித்து வரும் மத்திய அரசின் பங்கான 40 சதத்தை 65 சதமாக உயர்த்தி மாநில அரசின் பங்கான 25 சதம், ஆக 90 சத மானியத்தில் இத்திட்டத்தினை செயல்படுத்த மத்திய அரசு முன்வர வேண்டும்.

5) துல்லிய பண்ணைய முறையை தமிழக விவசாயிகள் அதிக அளவில் கடைபிடித்து வருவதால், இரசாயன உரங்களுக்கு விலை நிர்ணயம் செய்வதைப் போன்று நீரில் கரையும் உரங்களுக்கும் விலை நிர்ணயம் செய்யலாம்.

6) தமிழக மக்களின் முக்கிய உணவுப் பயிரான நெல்லுக்கு பேரிடர் நிவாரண நிதியின் கீழ் அளிக்கப்படும் இழப்பீடு எக்டருக்கு ரூ.4,000 போதுமானதாக இல்லை என்பதால், தமிழக அரசு எக்டருக்கு ரூ.7,500/— என வழங்கி வருகிறது. வறட்சியால் பாதிக்கப்பட்ட இத்தருணத்தில் நெல், வாழை மற்றும் ஆண்டுப் பயிர்களுக்கான இழப்பீட்டினை எக்டருக்கு ரூ.7,500/— ஆக உயர்த்தி வழங்க மத்திய அரசைக் கேட்டுக் கொள்கிறேன்.

7) தமிழகத்திலுள்ள மண்ணின் தன்மைக்கு கூடுதலான குதிரைத் திறன் கொண்ட டிராக்டர்கள் தேவைப்படுவதால், மானிய திட்டத்தில் தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள 35 குதிரைத்திறன் கொண்ட டிராக்டர்களுக்கு பதிலாக 45 குதிரைத் திறன் கொண்ட டிராக்டர்கள் வழங்க அனுமதியும், இவைகளுக்கான மானியத்தை 25 சதத்திலிருந்து 50 சதமாக உயர்த்தி வழங்கவும் மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

8) உணவு பதப்படுத்தும் தொழில்களுக்கு ஊக்கமளிக்க தற்போது வழங்கப்படும் 25 சத மானியத்தை 50 சதமாக உயர்த்தி வழங்க மத்திய அரசு முன் வர வேண்டும்.

9) தற்போது தமிழகத்தில் கோயம்புத்தூர், ஈரோடு, நாமக்கல் மற்றும் சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் பப்பாளி பயிரில் மாவுப் பூச்சி தாக்குதல் தோன்றி பருத்தி, நிலக்கடலை, மல்பெரி போன்ற வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் பரவி அதன் உற்பத்தியினை பாதித்து வருகிறது. இதனைக் கட்டுப்படுத்த தேவையான பயிர்பாதுகாப்பு மருந்து செலவினமான ரூ.10 கோடியை சிறப்பினமாகக் கருதி முழு மானியமாக மத்திய அரசு வழங்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

10) செம்பான் சிலந்தி தாக்குதலை கட்டுப்படுத்த தென்னை வளர்ச்சி வாரியம் மூலம் செயல்படுத்தப்படும் திட்டத்தில் தற்போது தென்னை வளர்ச்சி வாரியம் 25 சதம், மாநில அரசு 25 சதம், விவசாயிகள் 50 சதம் என பங்களிப்பு உள்ளது. விவசாயிகள் இச்செலவினத்தை ஏற்பதில் தயக்கம் காட்டுவதால் இச்சிலந்திப் பூச்சியை ஒழிக்க இயலவில்லை. அதனால் விவசாயிகளின் பங்கான 50 சதத்தை மத்திய அரசே ஏற்று இத்திட்டத்தை செயல்படுத்த மொத்த செலவினமான ரூ.18.78 கோடியில் 50 சதம் ரூ.9.39 கோடியை தமிழகத்திற்கு வழங்க மத்திய அரசு முன்வர வேண்டுமென கேட்டுக் கொள்ள விழைகிறேன்.

மிக முக்கியத்துவம் வாய்ந்த, இக்கூட்டத்தில் தமிழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்த மாண்புமிகு மத்திய உணவு மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

**********

Issued by: DIPR, Chennai-9.